இந்துசமயத்தின்

மூலமொழி

டாக்டர். J. T. சேவியர்,
M.B.B.S.(CEY.), F.R.C.S.(ENG.)

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு-மதுரை 1981

திருக்குறள்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தமிழ

A. J.
(ஆங்கி

M. சி

இந்து சமயத்தின் மூல மொழி சமஸ்கிருதமா - ஆதித் திராவிடமா?

(The Original Language of Hinduism
Sanskrit or Proto-Dravidian)

— டாக்டர் J. T. சேவியர் MBBS; FRCS

ஐந்தாவது உலகத் தமிழாராச்சி மாநாட்டில்
வாசிக்கப்பட்ட
ஆங்கில கட்டுரையின் தமிழாக்கம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல: 4, பஸ் ஸ்ராண்ட் யாழ்ப்பாணம்

தமிழாக்கம் :

A. J. கனகரத்தினா B. A. (Hons).)
(ஆங்கில விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

M. சின்னத்துரை B. A. (Cey.)

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

DEDICATED TO THE MEMORY

OF

REV. DR. X. S. THANI NAYAGAM

M. A.; M. Lit.; Ph. D.; D. D.

Founder and Father of the International Tamil Research Conferences

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது
யப்பானிய — ஈழத்துப் பிரதிநிதிகளுடன் ஆராய்ச்சிக் கட்டுரை ஆசிரியர்
டாக்டர் J. T. சேவியர்

பதிப்புரை

சத்திரசிகிச்சை நிபுணர் J. T. சேவியர் அவர்கள் தனது பகைப்புலமாகிய ''வைத்திய களத்திற்கு'' வெளியே சென்று மொழியியல், சொல்லாக்கவியல் மூலம் புதிய அணுகு முறையொன்றினை ஆராய்ச்சி அறிஞர்கள் மத்தியில் வைத்துள்ளார். இம்முயற்சி மொழியியல் வரலாற்றில் உரிய இடம் பெறும் என்பது உறுதி.

இவரது ஆராய்ச்சி, புதிய மொழியியல் வரலாற்று கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளன. இக்கருத்துக்களைப் பகிரங்கப் படுத்தவும், தமிழ் வாசகர் நன்மை கருதியும் ஐந்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் சமர்ப்பித்த கட்டுரையின் தமிழ் உருவத்தை ''இந்து சமயத்தின் மூல மொழி'' என்ற இச்சிறு நூல் வாயிலாக வழங்கியுள்ளோம். உண்மையில் இவரது ஆராய்ச்சியின் பெருமுயற்சியின் பெறுபேறுகளை "The Land of Letters" என்னும் நூலில்தான் காணமுடியும்.

இந்து சமயத்தின் மூலமொழி என்ற இந்நூலை வெளியிடுகையில் பல்வேறுவகையில் ஆலோசனை தந்துதவிய கலாநிதி சண்முகதாஸ் B.A. (Hons.) Phd. அவர்களுக்கும் ஐந்திர துரித கெதிக்கேற்ப மொழிபெயர்த்துதவிய திரு. A. J. கனகரத்தினா B. A. Hons. அவர்களுக்கும் எமது நன்றி.

அட்டைப் படத்தை வரைந்துதவிய தரன்ஸ்ரூடியோவினர்க்கும் மற்றும் படங்களை உருவப்பிரதி செய்துதவிய ஞானம்ஸ்ரூடியோவினர்க்கும் எமது நன்றி.

இப்புத்தக வெளியீட்டில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரு இயக்கமே சம்பந்தப் பட்டிருக்கின்றது. அதில் பங்கு கொண்டிருக்கும் சகலருக்கும் நன்றி,

இப்புத்தகத்தை குறுகிய காலத்துக்குள் வெகு அழகாக அச்சிட்டு உதவிய யாழ்- புனித வளன் கத்தோலிக்க பிரசுர நிறுவனத்தினர்க்கும் அதன் ஊழியர்களுக்கும் தோழமை உடைய எமது நன்றி.

எம். சின்னத்துரை.
அமைப்புக்குழு சார்பில்.

4/8 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
2-5-1981.

★ சிங்கள மொழியின் தோற்றுவாய்
— ஆதித் திராவிடமே

★ பைபிள் கூறும் ஆதாம் ஏவாள் கதைக்கரு
— திராவிடச் சித்திர எழுத்துக்கள்

★ ஆதித் திராவிடமே உலக நெடுங்கணக்கிற்கு
— வழிகாட்டி

★ வானசாஸ்திர, சோதிடக்கலை முன்னோடிகள்
— ஆதித் திராவிடர்களே

★ ஆதித் திராவிடமே இந்துசமயத்தின் மூலமொழி
— சமஸ்கிருதமல்ல

இந்து சமயத்தின் மூலமொழி சமஸ்கிருதமா — ஆதித் திராவிடமா?

மானிட சமுதாய நாகரீக வளர்ச்சிக்கும், அதன் அறிவு வளர்ச்சிக்கும் ஆதி மனிதனின் மதிநுட்பமான இரண்டு கண்டுபிடுப்புகள் வழி கோலின. ஒலித்தொடர்பு முறையாகிய பேச்சும், கட்புலத்தொடர்பு முறையாகிய எழுத்தும் மேற்கூறிய கண்டுபிடிப்புகளாகும். தற்கால அறிஞர்களால் ஆதித் திராவிடமொழி அல்லது தொல் திராவிடம்என அழைக்கப்படும் தமிழின் பழைய வடிவமே இந்து சமயத்தின் மூல மொழி என்ற கருத்தை நிரூபிக்க அதற்கான மொழியியல் சொல்லாக்க வியல் சான்றுகளைத் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

இந்து நாகரீகத்தின் மூலமொழி சமஸ்கிருதமாகத்தான் இருந் திருக்க வேண்டுமெனப் பொதுப்படையாக நம்பப்படுவதற்குக் காரணம் வேதங்கள் சமஸ்கிருதத்தில் இருப்பதை, ஆரியர் இந்தியா வுக்கு வருவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரும் — சமஸ்கிருத இலக்கியம் தோன்றுவதற்கு முன்னரும் இந்தியாவிலே இந்து நர்கரீகம்

நிலவியது என்ற உண்மையை ஹரப்பா, மொகஞ்சிதாரோ போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாய்வுகள் தெட்டத் தெளிவாக நிரூபிக்கின்றன. சிந்துவெளியிலுள்ள புதையுண்ட நகரங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளில் 5,000 ஆண்டு பழைமை வாய்ந்த சித்திர எழுத்துமுறை காணப்படுகின்றது. இதுவரையும் எமக்குத் தெரிந்துள்ளவற்றில் இதுவே இந்துக்களின் மிகப்பழைய கட்புல தொடர்பு முறையாகும். இந்துநதிப் பள்ளத்தாக்கு எழுத்துக்கள் திராவிட மொழியைச் சார்ந்தவைஎன்ற நம்பிக்கைக்குப் பல ஆதாரங்களைப் புகழ்வாய்ந்த அறிஞர்கள் பலர் முன்வைத்துள்ளபோதிலும், இவ்வெழுத்துக்களுக்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளக்கம் இன்னும் வெளிவரவில்லை. ஆதித் திராவிடமே இந்துசமயத்தின் மூலமொழி என்பதற்கான கல்வெட்டுக்களோ வேறு பண்டைய ஆதாரங்களோ இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. முற்கால இந்துக்களின் பேச்சு பதியப்பட்ட நாடாக்கள் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் இந்துசமயத்தின் மூலமொழி ஆதித் திராவிடமேயன்றி சமஸ்கிருதம் அல்லஎன நிரூபிப்பது மிகக் கடினமான — சாத்தியமற்ற காரியமாகத் தோன்றலாம்.

முற்கால இந்துக்களின் பேச்சுமொழி நாடாக்களில் பதிவு செய்யப்படவில்லை என்றகூற்றில் ஓர் அடிப்படை வழு உண்டு. இந்தியாவிலும் இலங்கையிலும் 5,000 ஆண்டுகளுக்குமேல் தொடர்பறுது இந்து நாகரீகம் செழித்தோங்கி வளர்ந்துள்ளது. முற்கால இந்துக்கள் பயன்படுத்திய ஒலி முறையின் துண்டங்கள் (சொற்கள்) அவர்களது வழித்தோன்றல்களின் மனதில் பரம்பரையாகப் பதிக்கப்பட்டன. இந்து சமயத்தின் மூல ஒலிக் கோவையின் துண்டங்கள் (வேர் சொற்கள்) பின்னர் இந்தியாவிலும் இலங்கையிலும், கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதிகளிலும், ஐரோப்பாவிலும் வளர்ச்சியுற்ற மொழிகளால் உள்வாங்கப்பட்டன. சுமேரிய, திராவிட, இந்து ஐரோப்பிய, செமித்திய மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த பல மொழிகளிலே ஆதித் திராவிட வேர்ச் சொற்கள் பரவியிருக்கின்றன என்பதற்குப் புகழ்வாய்ந்த அறிஞர்களான ஞானப்பிரகாச அடிகளாரும், தாவீது அடிகளாரும் மேற்கொண்டுள்ளஒப்பீட்டுமொழியயில் சொல்லாக்கவியல்ஆய்வுகள் சான்று பகர்கின்றன.

வணிகம், இலக்கியம், சமயம், விஞ்ஞானம், கணிதவியல், வானவியல் ஆகிய துறைகளிலே திராவிட அறிவும் பண்பாடும் அந்நிய தேசங்களில் பரவியமைக்குப் பல உலக மொழிகளிலே பேணப்பட்டுள்ள திராவிட வேர்ச்சொற்கள் சான்றுக அமைகின்றன. சில

ஆதித்திராவிட சரித்திர உண்மைகள் நீண்ட காலமாக மறக்கப்பட்டோ அல்லது திட்டமிட்டு மறைக்கப்பட்டோ வந்துள்ளன. இந்து சமயத்தின் மூலமொழி ஆதித் திராவிடமேயன்றி சமஸ்கிருதம் அல்ல என்ற கூற்றுக்கு சான்றுகளைத் தருவதோடு இக்கட்டுரை அமையும்.

சமஸ்கிருத தேவநாகரி வரிவடிவங்கள்

பண்டைய இந்தியாவின் விருட்சவழிபாடு, நாக வழிபாடு, விலங்கு வழிபாடு, லிங்கவழிபாடு, பல்வேறு குறியீடுகளினதும், விக்கிரகங்களினதும் வழிபாடு ஆகியவற்றின் தோற்றத்திற்கான காரணங்கள் செம்மையாகவே விளக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் இந்துப் பண்பாட்டிற்குப் பின்வாரிசுகளான ஆரியர் முற்கால இந்துக்களின் ஒலி எழுத்து வரிவடிவத் தொடர்பு முறைகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாமையே குதிரை தேர் என்பவற்றின் பாவனையால் போர்வல்லமையை அதிகமாக கொண்டிருந்த ஆரியர், தொகையில் குறைந்தவராக இருந்தபோதிலும், நாகரீகமுற்றிருந்த ஆதித் திராவிட இந்துக்களை வட-மேற்கு இந்தியாவில் அடிபணியச் செய்தனர். சிந்து வெளி மீது படையெடுத்த ஆரியர் சமஸ்கிருத மொழியைப் பேசவில்லை. அவர்கள் பேசிய மொழியின் பெயர் பாரசீக சக்கரவர்த்தி டேறியஸ்சின் (கி. மு. 521 — கி. மு. 485) கல்வெட்டுக்களில் ஆரியன் என்றும் பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஆரியம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆரியர் வரிவடிவத்தை இந்தியாவிற்குக் கொண்டுவரவில்லை. அவர்கள் எழுத்துக்கலையைத் தமது அரசியல் எதிரிகளான சிந்துவெளி வாசிகளிடமிருந்தே கற்றுக் கொண்டனர்.

ஆரியன் வருகைக்குமுன் இங்கு வாழ்ந்தவர்கள், பாம்பை வழிபட்டதினால் அரவர் அல்லது நாகர் எனப்பட்டனர். (அரவம்=பாம்பு, —தமிழ் ; நாகம்=நல்ல பாம்பு—தமிழ்) நாகர் பயன்படுத்திய நெடுங்கணக்கு வரிவடிவம் நாக—அரி எனப்பட்டது. நாக—அரி என்பதன் நேர் பொருள் நாக — எழுத்துக்கள் (அரி=வெட்டுதல், குடைந்து தோண்டுதல், எழுதுதல் சுரண்டுதல், தமிழ்) நாக வரிவடிவத்தை ஆரிய பண்டிதர் செப்பனிட்டு அதற்குத் தேவநாகரி எனப் பெயரிட்டனர்.

சிந்துவெளியில் கி. மு. 1500-ல் வாழ்ந்த ஆரியர்களினதும், திராவிடர்களினதும் கலப்புவழித் தோன்றல்கள் சமஸ்கிருத (சமஸ்கிருதம்) என்ற புதிய ஆரிய — திராவிட கலப்பு மொழியினை உருவாக்கினர்.



1 தாமிழி (பழந் தமிழ்)
2 தமிழ்
3 பிராமி
4 தேவநாகரி(சமஸ்கிருதம்)
5 சிங்களம்
6 மலையாளம்

1 தாமிழி
2 தமிழ்
3 பிராமி
4 தேவநாகரி
5 சிங்களம்
6 மலையாளம்

ஆதித்திராவிட
சித்திர எழுத்துகள்

தாமிழியின் கிளை எழுத்துகள் (2–6)

சமஸ்கிருத என்ற பதத்தின் மூல அர்த்தத்தினை, '' சம் '' '' கிருத '' என்ற வேர்ச் சொற்களில் இருந்து உய்த்துணரலாம். ஒரு சொல்லின் அல்லது பெயரின் ஆக்கக்கூறு வேர்களின்முன் அல்லது இடையில் ''ச,ஸ'' என்ற ஒலியை இடுதல் சமஸ்கிருதத்தின் மொழியியல் தனித் தன்மையாகும். (உதாரணம் : கந்தன் — ஸ்கந்தன், சம் — கிருத — சம்ஸ் கிருத = கூட்டுதல், பெருக்குதல், இணைத்தல், சேர்த்தல் அல்லது கலத்தல் ; கிருத = ஆக்கப்பட்ட) எனவே சமஸ்கிருதம் வட இந்திய ஆரிய — திராவிடரின் '' கூட்டாக ஆக்கப்பட்ட '' அல்லது '' கலந்து செய்யப்பட்ட '' மொழியாகும் காலப்போக்கிலே சமஸ்கிருத என்னும் பதம் '' பெருப்பிக்கப்பட்ட, திருத்தப்பட்ட, செப்பனிடப்பட்ட அல்லது பூரணமாக்கப்பட்ட '' என்ற இரண்டாம் மட்ட அர்த்தங்களைப் பெற்றது.

ஆதித் திராவிட நெடுங்கணக்கின் ஒலியமைப்பு அல்லது சுவடி ஆரியப் பேச்சின் மேலதிக ஒலிகளை உள்வாங்கும் பொருட்டு திருத்தப்பட்டு பெருப்பிக்கப்பட வேண்டிநேர்ந்தது. சமஸ்கிருதம் என்ற புதிய கலப்பு மொழியில் இம்மேலதிக ஒலிகள் இணைக்கப்பட்டன. ஆதித் திராவிட நெடுங்கணக்கு தமிழ்நாட்டில் (தென்னிந்தியாவில்) அரிச்சுவடி எனப்பட்டது, வட இந்தியாவில் நாக அரிச்சுவடி என்றும், பண்டைய இலங்கையில் எழு சுவடி (எழு-ஹோடிய) என்றும் வழங்கப்பட்டது. '' அரி, இழு, இழி, ஈழ, எழு '' என்ற ஆதித்திராவிட வினைச்சொற்கள் '' வரைதல், உருவப்படம் கீறுதல், பொறித்து வைத்தல், எழுதுதல் '' என்ற பொருள்களையுடைய ஒரே கருத்தைத் தரும் சொற்களாகும். பெயர்ச்சொற்கள் என்ற முறையில் இவை, '' படம், சித்திர எழுத்து, கல்வெட்டு, எழுத்து '' என்ற பொருள்களையுடையன. நெடுங்கணக்கிற்கு மிகப்பழைய தமிழ்ச்சொல் சுவடி என்ற பதமே. ஆதித்திராவிட அரிச்சுவடி (நெடுங்கணக்கு) செப்பனிடப்பட்டு சமஸ்கிருத அட்சரமாலாஎன அதற்குப் புதுப்பெயர் இடப்பட்டது. இதன் நேர்பொருள் '' பெருப்பிக்கப்பட்ட கலந்து அல்லது செப்பனிடப்பட்ட எழுத்துக் கோவை '' என்பதாகும். இக்கட்டத்தில் இரு கேள்விகள் ஆராயப்பட வேண்டியவை.

1. சிந்துவெளிப் பள்ளத்தாக்கின் சித்திர எழுத்துமுறை கி. மு. 2000 ஆண்டளவில் திடீரென வழக்கொழிந்ததற்குக் காரணம் என்ன ?
2. ஆரியர்களால் செப்பனிடப்பட்டு, பொருத்தமாகச் சமஸ்கிருதஅட்சரமாலா எனப் பெயரிடப்படமுன் சிந்துவெளியில் வழக்கில்இருந்த நாக—அரிச் சுவடியை (நாக—நெடுங்கணக்கை) இயற்றியவர் யார் ?



தாமிழி உயிர் எழுத்துகளும்
அவற்றின் கிளை எழுத்துகளும்

கி. மு. மூவாயிரத்தின்இறுதியில் சிந்துவெளி சித்திர எழுத்து வடிவம் திடீரென வழக்கொழிந்தது. சிந்துநதியின் கட்டுமீறிய வெள்ளப் பெருக்குகளும் சிந்துவெளிமீது ஆரியர் படையெடுத்தமையும், சிந்து வெளி நகரங்கள் அழிக்கப்படுவதற்கும், சிந்துவெளி எழுத்து வடிவம் முற்றுகவும் திடீரெனவும் வழக்கொழிவதற்கும் வழிகோலின எனக் கருதப்படுகின்றது. ஆனால், முன்னேற்றமடைந்துள்ள ஒரு நாகரீகத்தில் வாழ்ந்த எழுத்து வாசனை படைத்த ஆதித்திராவிட ஆய்வறிவாளர் சகலரையும் கடற்கோள்களோ, படையெடுப்புக்களோ அழித்திருக்க முடியாது. சிந்துவெளி எழுத்துவடிவம் திடீரெனக் கைவிடப்பட்டமைக்குக் காரணம் மிக முன்னேற்றமான ஒலி அமைப்பு முறையினைச் சார்ந்த வரி வடிவம் அல்லது நெடுங்கணக்கு உருவாக்கப்பட்டு கையாளப்பட்டமையே, இம்முறையில் ஒவ்வொரு படம், குறியீடு அல்லது எழுத்து ஒரு குறிப்பிட்ட ஒலியைக் குறிக்கின்றதேயொழிய முழுச் சொல்லையோ எண்ணத்தையோ குறிப்பதல்ல.

ஆதித் திராவிட நெடுங்கணக்கு

கண்டிப்பாக ஒலிப்பு முறையில் அமைந்த நெடுங்கணக்கைக் குறிக்கும் மிகப்பழைய தமிழ்ப் பதங்களான சுவடியும், அரிச்சுவடியும் தமிழரின் மூ த ா தை ய ரே தமது நெடுங்கணக்கை உருவாக்கியவர்கள் என்பதற்கு மொழியியல் வேர்ச் சொல்லியல் சான்று பகர்கின்றது. ஆதித் திராவிட பேச்சின் ஒலிக்கூறுகளை ஆராய்ந்து மிக முக்கியமான " அடிப்படை ஒலிகளை " மட்டுமே எழுத்துக்களால் குறிப்பதற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற மிகச் சிறப்பான எண்ணத்தின் உதயம் சுவடி என்ற தூய தமிழ்ப்பதத்தில் தெட்டத் தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகின்றது. (இதன் வேர்ச் சொற்கள் 'சு' = ஒலி, 'அடி' = அடிப் பகுதி, பாதம், அடித்தளம்) தமிழ் நெடுங்கணக்கை உருவாக்கிய பெயர் தெரியாத மேதை அதன் ஒலிக்கூட்டை " சுவடி " அல்லது " அடிப் படை ஒலிகள் " எனப் பெயரிட்டார். " வரைதல், பொறித்தல், எழுதுதல் " என்ற பொருள்களை ஆதித் திராவிட வினையடிகளாகிய " அரி, எழு " என்ற இணைபொருட் சொற்கள் கொண்டிருப்பதால் தமிழ் ஒலிகூட்டை (சுவடியை)க் குறிக்கும் ஒளிவடிவம் அல்லது வரிவடிவம், " அரிச்சுவடி " அலலது எழு — சுவடி எனப் பெயரிடப்பட்டது.

நவீன சிங்கள நெடுங்கணக்கின் முன்னோடிக்கு " எழுஹோ[illegible] ", எனப் பெயரிடப்பட்டமை ஈண்டு குறிக்கற்பாலது. கிறிஸ்[illegible] முற்பட்ட காலத்தில் தமிழரினதும், சிங்களவரினதும் மூதா[illegible]

ஒரே தாமீழி வரிவடிவத்தைக் கையாண்டனர். கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் மேற்கூறிய பழம் தமிழ் வரிவடிவத்திற்குத் தாமீழி என்ற பிராக் கிருதப்பெயர் வழங்கப்பட்டு வந்தது. "தாமிழி" என்பது ஆதித் திராவிடத்தில் " தென்–எழுத்து " என்ற கருத்தைத்தரும். " தெம்–இழ், தெம் – இழ, தமிழ் " போன்ற பதங்களின் சிதைவாக இருக்கலாம்.

ஆதித் திராவிட மொழியின் உண்மையான பண்டையப் பெயர் யாது என்பது தெளிவாகத் தெரியாது. மக்களின் இடப்பெயர்வு தொடர்பான வரலாற்று இதிகாச ஆவணங்களிலிருந்தும், இந்தியாவினதும், இலங்கையினதும் இனமொழி சார்ந்த குழுக்களின் தோற்றுவாய் குறித்து வழங்கிவரும் வரலாற்று இதிகாச ஆவணங்களிலிருந்தும், பண்டைய இடப்பெயர்கள், குலப்பெயர்கள், மொழிப்பெயர்கள் ஆகியவற்றை ஆராய்ந்ததிலிருந்து ஆதித் திராவிடர் தமது மொழிக்கு எழு, எழ அல்லது ஈழமொழி எனப் பெயரிட்டிருந்தனர் என நான் ஊகிக்கிறேன். எழு அல்லது ஈழமொழி என்ற பதத்தின் நேர் அர்த்தம் எழுத்துமொழி ஆகும்.

ஆதித் திராவிடர்கள் சிந்துவெளிசித்திர எழுத்து வடிவத்தினைக் கையாண்ட காலத்தில் தங்கள்மொழிக்கு ஈழ அல்லது எழுத்து மொழி எனப் பெயரிட்டனர். ஒரே பொருளையுடைய் மொழி இனப் பெயர்களான " எழு, எழ, ஈழ " ஆகியவை சிந்துவெளியின் 4000 ஆண்டு பழமைவாய்ந்த சுமேரியப் பெயரான " மெ-எழு-அஹ " விலும் — இலங்கையின் மிகவும் பண்டைய பெயரான ஈழ–அஹம் அல்லது ஈழம் பதத்திலும், தமிழ்–தெம்–ஈழ) என்ற மொழிப் பெயரிலும், சிங்கள மொழியின் மிகப்பழைய பெயர்களான எழு, ஹெழ, சீள, சிஹள ஆகியவற்றிலும் பேணப்பட்டுள்ளன. பௌத்த குருமாரின் பிராகிருத உச்சரிப்புமுறை " ஹ, ச, ஸ " ஒலிகளை முன் ஒட்டுக்களாகப் புகுத்தி இதன் விளைவாக எழ, ஈழ, ஆகிய திராவிடப் பெயர்களை ஹெள, சீள எனவும் ஈற்றிலே சிஹள எனவும் மாறிவிட்டது. மகாவம்சத்தை எழுதியவர் சிஹ–ள என்ற பதத்தில் " சிங்கத்தைக் கொன்றவர் " என்ற அர்த்தத்தைக் கண்டார். சிஹள என்ற பிரகக்கிருதுப் பெயர் சமஸ்கிருத மொழிபெயர்ப்பினுல் சிங்ஹ–ள ஆக உருமாறியது. (சிஹ = சிங்ஹ = சிங்கம்).

கி. மு. ஆறும் நூற்றுண்டில் பண்டைய ஈழத்தில் (இலங்கையில்) நாகர் பேசிய மொழிக்கு வழங்கிய இணைபொருள் பெயர்கள் " எழு " வும் " ஈழ "வும் என்பது தெளிவு. பண்டைக்கால நாகர் விருட்சங்களையும், சர்ப்பங்களையும் வணங்கிய ஆதித் திராவிட இந்துக்கள் ஆத

லால் நாகர் இந்துவெளியிலும் வாழ்ந்திருந்ததால் சிந்துவெளி நாகரீகத்தில் வழங்கிய மொழியின் பெயரும் " எழு " அல்லது " ஈழ " ஆக இருந்திருத்தல் வேண்டும் எனக் கருதுவது நியாயமே. பண்டைக்கால திராவிட இந்து எழுத்து மொழியின் மிகப் பழையதும் ஆகக் குறைந்த மாற்றம் அடைந்ததுமான மொழித்தோன்றல் தமிழாகும். ஆதித்திராவிட ஈழ மொழியிலிருந்தும் இம்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த வேறு வழித்தோன்றல் மொழிகளிலிருந்தும் வேறுபடுத்துவதற்காகத் தெம் மதுரையில் வளர்ச்சி பெற்ற திராவிட மொழியைத் தெம் — ஈழ அல்லது தமிழ்மொழி என சங்ககால புலவர்கள் பெயரிட்டார்கள்.

பௌத்த மதத்தை ஆதரித்த ஈழத் தமிழர்களின் மொழி, கி. மு. 2-ம்நூற்றுண்டு காலப்பகுதியிலும் ஈழமொழிஎன்றே அழைக்கப்பட்டது. கி. பி. இரண்டாம் நூற்றுண்டளவில் பௌத்தமதக் குருமார்களின் உச்சரிப்பு ஈழ — அகத்தின் பெயரை சிஹள என மாற்றிவிட்டது. சிஹள மொழி காலப்போக்கில் பிராகிருத, பாளி, சமஸ்கிருத மொழிகளின் பாதிப்பினுல் மாற்றம் அடைந்து தனி உருவம் பெற்றது, சிஹள அல்லது சிங்கள மொழி திராவிட மொழிக் குடும்பத்தில் இருபத்தொராவது மொழியாகும். சிங்கள மொழியின் ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் பௌத்த சங்கத்தினர்கள் மூலகாரண கர்த்தாக்களாக இருந்திருக்கின்ருர்கள். கற்பனைக் கதையில் கூறப்பட்டுள்ள "சிஹ—ள" அல்லது சிங்கத்தைக் கொன்றவனின் பரம்பரையினர் சிங்கள மொழியைப் பேசவுமில்லை. இம்மொழியின் வளர்ச்சிக்கு எதுவித பங்களிப்புச் செய்யவுமில்லை.

ஈழத்திலும் இந்தியாவிலும் பல நெடுங்கணக்குகள் உருவாகின. இவற்றில் தமிழ் நெடுங்கணக்கிலே மிகக்குறைந்த எழுத்துக்கள் இருப்பதினுல் தமிழ் நெடுங்கணக்கே மூல ஆதித்திராவிட நெடுங்கணக்கின் மிகப்பழைய நேரடி வழித்தோன்றல் என ஊகிக்கலாம். பழம் தமிழ் அல்லது ' தாமிழி ' என்ற எழுத்து வடிவத்தின் பிற்கால வளர்ச்சிகளே பிராமி, தேவநாகரி வரிவடிவங்களாகும். தாமிழி ஆதித் தமிழ் எழுத்துக்கள் என உணராதவர்கள், இவ் எழுத்துக்களைத் தமிழ் — பிராமி என்றும் தென்--பிராமி என்றும் அழைத்தார்கள்.

ஆதித் திராவிட அரிச்சுவடி கண்டுபிடிக்கப்பட்டமை இலக்கிய முயற்சிகளுக்கு வழிகோலின. ஏறத்தாழ கி. மு. 2000-த்தில் அல்லது அதற்குச் சற்றுமுன்னர் இயற்றப்பட்ட ஆதித் திராவிட அரிச்சுவடி வடிவங்களில் எழுதப்பட்ட ஆவணங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் பனை ஓலை போன்ற இலகுவாக அழிந்துபோகும் எழுதும் சாதனங்கள் உபயோகிக்கப் பட்டமையாகும். இதுவரை கிடைக்கப்



தாமிழி (Tem-ELU) எழுத்துகளும் அவற்றை ஒத்த பராமி (Sinha-ELU) பினீசிய, கிரேக்க, ரோம எழுத்துகளும்

பட்டுள்ள தமிழ்மொழியில், தாமீழி எழுத்துக்களில் எழுதப்பட்ட மிகப்பழைய கல்வெட்டுக்கள் கி. மு. 3-ம் நூற்றுண்டைச் சார்ந்தவை ஆகும். கி. மு. 2000-த்தைச் சார்ந்தவை எனக் கணிக்கப்பட்ட பீனிசிய (வட செமித்திய) வரிவடிவங்கள் அமைப்பிலும், பொதுத் தோற்றத்திலும் தமிழ் நாட்டுத் தாமிழி, மத்திய, இந்திய, பிராமி எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. இந்த அவதானிப்புகளிலிருந்து தோற்றுவாயில் பீனிசிய, தாமிழி, பிராமி எழுத்துக்களுக்கு இடையே தொடர்பு இருக்கின்றது என்று அறிஞர்கள் ஊகிக்கின்றனர். கல்வெட்டுகளில் பாதுகாக்கப்பட்ட எழுத்துக்களில் மிகப் பழமையானவை யாக பீனிசிய எழுத்துக்களாக இருப்பதனுல், பெரும்பாலும் கல்வெட்டியல் அடிப்படையில் பேராசிரியர் மொனியர் வில்லியமஸ் (1899) பின்வரும் கருத்தினை வெளியிட்டார். " உலகத்தின் முன்னேற்றத்தில் மிக முக்கிய காரணியாகவிருந்த் ஒலிப்பு முறையைச் சார்ந்த நெடுங்கணக்கை பீனீசியாவே கண்டுபிடித்திருக்க வேண்டும் என்றே தற்போதுள்ள கல்வெட்டியல் சான்றுகளி லி ரு ந் து கருத வேண்டியுள்ளது ".

பீனிகியர் ஒலிப்பு முறையைச் சார்ந்த தமது நெடுங்கணக்கைத் தாமே கண்டுபிடித்திருந்தால் தமது எழுத்துக்களுக்குப் பெயரிடுவதற்கு ஒரே சீரான முறையைக் கடைப்பிடித்திருப்பார்கள். தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களுக்குப் பின்வரும் முறையில் பெயரிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட எழுத்து குறிக்கும் அடிப்படை ஒலிக்கு ,'எழுத்து" என்ற அர்த்தத்தைப் பாய்ச்சும் பின்னெட்டு இணைக்கப்பட்டது. பீனிசிய நெடுங்கணக்கில்உள்ள எழுத்துக்களைப் பெயரிடுவதற்குக் கையாளப்பட்ட பின்னெட்டுக்கள் " எழுத்து அல்லது எண்ணெழுத்து " என்பதைக் குறிக்கும் ஆதித் திராவிட, தமிழ்ச் சொற்களிலும் வேர்களிலுமிருந்து பெறப்பட்டு திரிபுற்ற வடிவங்களே என்பது தெட்டத் தெளிவு. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை பீனிசிய எழுத்துக்களைப் பெயரிடுவதற்குக் கையாளப்பட்ட பின்னெட்டுக்கள் எவ்வாறு பெறப்பட்டிருக்கலாம் என்பதனை விளக்குகின்றது.

பினிசிய எழுத்து— பெயர்களின் திராவிட மூலங்கள்

திராவிட பின்னொட்டுக்கள் "எழுத்து அல்லது எண்"	பினிசிய எழுத்து — பெயர்கள்	பெறப்பட்ட முறை
eluththu	D-aleth B-eth Kh-eth	eluththu — aleth eththu — eth
lipi	A-leph K-aph K-oph	lipi — leph — aph — oph (vowel alternance and elision of 'l')
en — anna vanna yanna	M-em N-un A-yin Sh-in Z-ayin	en — em en — in — un yanna — ayin (vowel and n/m alternance)
elu edu en	L-am-ed G-im-el S-am-ech Y-od	en — em — im — am & elu — el edu — ed — od eluththu — eth — een (n/m, l/d and vowel alternance)

உலகத்தின் முதலாவது ஒலிப்புமுறை சார்ந்த நெடுங்கணக்கை உருவாக்கிய ஆதி திராவிடர்களிடமிருந்தே செமித்திய மக்கள் எழுத்தைப் பற்றிய எண்ணக்கருக்களையும், எழுத்துக்களின் பெயர்களையும் பெற்றனர் என்ற கூற்றினை மொழியியல், வேர்ச் சொல்லியல் சான்றுகள் ஆதரிக்கின்றன.

தாய் தெய்வ வழிபாடு

சொற் பிறப்பில் "உதி ஆதி" என்ற இரு தமிழ் சொற்களுடன் நெருங்கிய தொடர்புற்றிருக்கும் "தி, த்தி, அத்தி" என்ற ஆதித் திராவிடச் சொற்கள் பண்டைக்கால பிறமொழிகளில் சிலவற்றிலும் உள்வாங்கப்பட்டன. இச்சொல்லின் அர்த்தங்கள் பின்வருமாறு :

சொல்	அர்த்தங்கள்			
	ஆதித் திராவிடம்	தமிழ்	சுமேரியம்	பாளி
தி, த்தி அத்தி	(1) தாய் (2) தாய்தெய்வம் (3) பெண் (4) உயிரினங்களில் ஆதி, ஆதிமூலம் (5) தெய்வம்	பெண்பால் குறிக்கும் விகுதி (உதாரணம் குறத்தி ராசாத்தி)	(1) தாய் (2) பெண் (3) பிள்ளை பெறுதல், உயிர் கொடுத்தல் படைத்தல் (4) விலா எலும்பு	(1) தாய் (2) பெண்
அத்தி	(1) அரச மரம் (2) ஜீவ மரம் (3) புததி மரம் (போதி மரம்)	அரசமரம் ஜீவ மரம்	— —	— —

சமஸ்கிருத மொழியில் "தி" ஸ்திரீ (=பெண்) ஆகவும் சக்தி (=பெண் - தெய்வம்) ஆகவும், — வதி — பதி (முதல்வன் — கடவுள்) என்ற விகுதிகளாகவும் திரிபடைந்தது.

முற்கால இந்து மெய்யியலாளர் உலகிலுள்ள உயிரினங்களின் ஆதிமூலம் 'படைக்கும் அன்னையே' (Mother Creator) எனக் கருதினர். இதற்கு அத்தி (= ஆதி மூலம்) ஆதி—தி எனப் பெயரிட்டனர். எல்லாத் தெய்வங்களினதும் தாயைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சமஸ்கிருதப் பதமாகிய ஆதி—தி ஆதி திராவிட மூலத்திலிருந்து பெறப்பட்டது. ஆதி—தி என்ற பதம் தாய்த் தெய்வத்தை 'ஆதி அன்னை' யாரக வர்ணிக்கின்றது.

ஆதாமினதும், ஏவாளினதும் படைப்புப்பற்றி விவிலிய நூலில் கூறப்பட்டிருக்கும் கதை சுமேரிய மூலங்களிலிருந்து பெறப்பட்டதாகக் கருதப்படுகின்றது. சுமேரியச் சொல்லாகிய ''தி'' தவருக மொழி பெயர்க்கப்பட்டதன் விளைவாகவே ஏவாள் ஆதாமின் **விலா எலும்பி லிருந்து** படைக்கப்பட்டாள் என்ற கதை உருவாகியிருக்கலாம் என அஸ்கோபார்ப்பொலா விளக்கியுள்ளார். '' தி '' என்ற சுமேரியச் சொல் ஹிபுறுவில் செலா (விலா என்பதற்கு ஹிபுறு சொல்) என தவறுதலாக மொழிபெயர்க்கப்பட்டமையே விவிலிய நூலில் பதியப்பட்டிருக்கும் ஹிபுறு கதையின் தோற்றுவாயை விளக்குகின்றது.

பண்டைய திராவிடர்கள் ஆதி அன்னையை வழிபட்டனர். தமது தாய்த் தெய்வம் — 'தி', ஆதி–தி, ஆதி அம்மா — மனு–தி எனப்பட்ட முதலாவது மனிததாயைப் பெற்றெடுத்தாள் என அவர்கள் நம்பினர். (மனு = மனித, தி=தாய்)

இறைவனின் ஆணையை மீறியதனுல் ஆதாமும் ஏவாளும் மண் ணுலக சொக்கம் ஆகிய பாரர்தேச (Paradase) ஏதேன் தோட்டத் திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆதி அன்னை வழிபாடுகளுக்கும், விருட்ச வழிபாட்டிற்குமிடையே உள்ள தொடர்பினை ஆராய்வதற்கு விவிலியநூலின் ஆதியாகமத்திலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மேற் கோள்கள் மிகப் பொருத்தம் வாய்ந்தவை.

(8) தேவனுகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட் டத்தை உண்டாக்கித் தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

(9) தேவனுகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமு மான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினுர்.

(16) தேவனுகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

(17) ஆனுலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி யைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

(ஆதியாகமம் அதிகாரம் 2, வாக்கியங்கள் 8, 9, 16, 17)

(4) அப்பொழுது **சர்ப்பம்** ஸ்திரீயை நோக்கி, நீங்கள் சாகவே சாவதில்லை;

(5) நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப் படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

(6) அப்பொழுது ஸ்திரியானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல் லதும் பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கின்றது என்று கண்டு அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

(22) பின்பு தேவனாகிய கர்த்தர்; இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராத படிக்குச் செய்ய வேண்டும் என்று

(23) அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

(24) அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவ விருட்சத்துக்குப் போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.

(ஆதியாகமம், அதிகாரம் 3, வாக்கியங்கள், 4, 5, 6, 22, 23, 24)

பாரத தேசத்தில் (விவிலிய பாரர் தேசத்தில்) வாழ்ந்த ஆதித்திராவிடர்களின் தாய் தெய்வமான ஆதிஅம்மா படைத்த முதல் மானிடத் தாயாகிய மனுதி என்பவள் ஆசை அல்லது ரதியினால் தூண்டப்பெற்று அமிர்தம் தரும் கனியை இழந்து பிறப்பு-இறப்பு, இன்ப-துன்பம் ஆகியவற்றை அனுபவிக்கும் தண்டனையுடன் வெளியேற்றப்பட்டாள் என்ற ஆதித்திராவிடச் சித்திர எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்த சமயக்கதை பிற்கால சுமேரிய சாசனங்களில் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு திராவிட சித்திர எழுத்துகளில் பதிவு செய்யப்பட்ட சமயபோதனைகள் வேதங்களில் ஆரிய பிராமணர்களினால் மீளப்பதிவு செய்வதற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன் இவை சுமேரியரையும், ஈப்ருக்களையும் சென்றடைந்து விட்டன என்பது தெளிவு ஆகும்.

"ஆதி அம்மா படைத்த மனுதி" என்ற திராவிடச் சித்திர எழுத்துக் கதை, விவிலிய வேதத்தில் "ஆதாமின் விலாவால் ஆக்கப்பட்ட ஏவாள்" கதையாக மாறிவிட்டது. அறிவு அல்லது போதி மரத்திலிருந்த சர்ப்பம் ஆதித் திராவிட எழுத்துக்களில் அர—அத்தி எனக் குறிக்கப்பட்டு காமக் கடவுளைச் சுட்டிக்காட்டியது. ஆசையை அடக்காதவர்களுக்கு மறுபிறப்பும், இறப்பும் தண்டனை எனவும், ஆசையை அடக்கினுல் மட்டுமே ஜீவ விருட்சத்தை அடைந்து அமரநிலை பெறலாம் எனவும் இக்கற்பனைக் கதை வலியுறுத்துகின்றது.

சுமேரிய—யூதர் ஆகியோரின் நெடுங்கணக்கு முறைக்கும், எழுத்து முறைக்கும் மற்றும் சமய தத்துவ போதனைக்கும் ஆதித் திராவிடமே மூலவழிகாட்டியாக இருந்தன என்பதற்கு விவிலிய ஆதாம்-ஏவாள் கதை சிறந்த சான்ருக விளங்குகின்றது.

விருட்ச வழிபாட்டின் தோற்றுவாய்

சிந்துவெளி இலச்சினைகளில் மிகக் கூடுதலாகக் காணப்படும் விருட்சம் அரச மரமே. (Ficus religiosa) இது சமஸ்கிருதத்தில் பிம்பாலா என்றும் அஸ்வத என்றும் அழைக்கப்படுகிறது. இதுவே பௌத்தர்களின் போதிமரம் அல்லது ஞான விருட்சமாகும். இம்மரத்தின் நவீன தமிழ்ப் பெயர் அரசு ஆயினும் திராவிட மொழிகளாகிய தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் அத்தி என்று வழங்கப்படுகின்றது. அத்திமரத்தின் நேர் பொருள் தாய் மரமாகும். இதைச் சுரண்டினுல் பால்வடியுமாதலால் இப்பெயர் இதற்கு வழங்கியது போலும். அரச மரத்திற்கு வழங்கிய ஆதிதிராவிடப் பெயரும் தாய்த் தெய்வத்தின் பெயரும் ஒன்ருக இருந்ததினுல் தாய்த் தெய்வத்தின் குறியீடாக அத்திமரம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அத்தி மரம் உயிரினங்களைப் படைத்தவளின் (சித்திர எழுத்து) ஜீவ விருட்சம் என வழங்கப்பட்டது. ஆதி திராவிடர்களால் உருவாக்கப்பட்ட சித்திர எழுத்து வடிவத்தில் அத்தி மரத்தின் சித்திரம் தாய்த்தெய்வத்தின் பெயரைச் சுட்டி நின்றது.

பூமாதேவி பிரபஞ்ச விருட்சம்

உலகமே (தமிழில் பார்) உயிரினங்களைப் படைத்த தாய் (ஆதி, தி) தனது மலைகளிலிருந்து ஊற்றெடுக்கும் ஆறுகள்மூலம் உயிரினங்களை அது பராமரிக்கின்றது. இறப்பிற்குப்பின் எல்லா உயிரினங்களும் அதற்குள்ளே அமிழ்ந்து விடுகின்றன. இதனுல் உலகம் பார்—அத்தி எனப்

பட்டது. பற (பறத்தல்), பறவை (பட்சி) என்ற ஆதிதிராவிட தமிழ் சொற்களின்ஒலிப்புக்கள் பறவை ஓவிய எழுத்தினுல் மிகத் திற மையாகச் சுட்டப்பட்டது. பறவையினதும் அத்தி மரத்தினதும் கூட்டு ஓவிய எழுத்துக்கள் பார்—அத்தி (பாரவர்,தி) பூமா தேவியாகிய பறவை —தி (பார்வதி) ஆகியோருடைய பெயர்களைச் சுட்டிநின்றன. பூமா தேவியை வழிபட்டவர்கள் பாரர், பாரவர், பாராதியர், பாரதர் எனப்பட்டனர். இவர்களுடைய இலச்சினை பறவையே.

பற என்ற தமிழ் வினை 'பறத்தல், பரவுதல், சிதறுதல், பரந் திருத்தல்' ஆகிய அர்த்தங்களை உணர்த்துகின்றது. கூட்டு பறவை— விருட்ச ஓவிய எழுத்து எங்கும் பரவி நிற்கும் படைப்பு பெண்தெய் வத்தைக் குறித்தது. எனவே அத்திமரம் பிரபஞ்ச விருட்சம் எனப் பட்டது. (மும்மூர்த்திகளின் இருப்பிடம்)

பூமாதேவியை வழிபட்ட ஆதித் திராவிடர்கள் பண்டைய இந்தி யாவை பாரர்—தா (பாரத்த) அல்லது பாரர்—தேச (விவிலிய நூலின் பரடைஸ்) என்றழைத்தனர். ('த = தேசம் = தரிப்பிடம், இருப்பிடம், நிலம் அல்லது தேசம்' ≯ ஆதித் திராவிடம்). பூமாதேவியை வழிபட்ட ஆதித் திராவிடர்களின் இருப்பிடமாகிய சுவர்க்கலோகத்தின் நடுவில் ஜீவ விருட்சம் இருந்தமை வியப்பன்று.

கங்காதேவியும் இச்சை விருட்சமும்

சிந்து நதியின் ஆற்றங்கரைகளிலே வாழ்ந்த ஆதி திராவிடர் தம்மை சிந்தவர் அல்லது அரவர் என்றழைத்தனர். இதன் கருத்து ஆற்று மக்கள் ஆகும் (சிந்து = ஆறு; அர் = அவர் = 'மக்கள்' என்ப தைக் குறிக்கும் பின்னொட்டு, தமிழ்; அர = ஆறு அல்லது பாம்பு), ஆதி திராவிடர் தமது தெய்வத்தைக் கங்காதேவி அல்லது அர—தி என்றழைத் தனர். அப்பெண்தெய்வத்தின் இலச்சினையில் பாம்பும் அத்திமரமும் இடம்பெற்றன. கங்காதேவி மண்வளத்திற்கும், செல்வத்திற்கும் மக் களின் சுபிட்சத்திற்கும் காலாயிருந்தாள். தமது ஆசைகள் நிறைவேறு வதற்கு மக்கள் அவள் ஆசியை வேண்டிநின்றனர். கங்காதேவி 'ஆசை தெய்வம் (அர—தி, ரதி') எனப்பட்டாள்.

சிந்து வெளி இலச்சினை ஒன்றில் எருமை மாட்டு (மா) கொம்பு களை அணிந்த பெண்தெய்வம் அத்திமரத் தண்டினுள் இருப்பதாக பொறிக்கப்பட்டிருக்கிறது. சித்திர எழுத்து அடிப்படையில் இத்தெய் வத்தை மாத்தி என கருதலாம். சமஸ்கிருத மொழியில் இப்பெயர் சிந்து—மதி என உச்சரிக்கப்பட்டு சரஸ்வதியின் இன்னொரு பெயரா யிற்று. இன்னொரு இலச்சினையில் இத்தெய்வம் சிந்து நதியின் ஏழு கிளைகளைக் குறிக்குமுகமாகப் பொறிக்கப்பட்ட ஏழு பெண் தெய்வங் களுடன் காணப்படுகிறாள்.

மீன்கொடிப் பாண்டியன்

ஆதித்திராவிடரின் இனக்குழுக் குறியீடுகள் தொழில் அல்லது சாதியை மையமாகக் கொள்ளாது மத, பிரதேச அம்சத்தை அடிப் படை ஆதாரமாகக் கொண்டன. இருமீன் சின்னம் மீனவரின் இனக் குழுவைக் குறிக்கும் சித்திர எழுத்தாகும். மீனவர் என்ற பெயர் அக் காலத்தில் நவக்கிரகங்களை வழிபட்டோரைக் குறித்ததேயன்றி மீன் பிடித்தொழிலை மேற்கொண்டோரைக் குறிக்கவில்லை. ஆதித் திரா விடத்தில் மின் என்ற சொல் கோள்கள், நட்சத்திரங்களின் பொதுப் பெயராக இருந்தது. இவ்வடிப்படையில் எழுந்ததே மின்னவர் (மீன வர்) என்ற பெயராகும். இவர்கள் வானசாஸ்திரக் கலையில் வல்லவ ராக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் முதல்முதலாகக் காலத்தை அளக்கும் முறையை யும், கிழமை, மாதம், ஆண்டு ஆகியவற்றை வகுக்கும் முறையையும் கண்டுபிடித்தவர்கள் ஆதித்திராவிட மீனவ குழுவினர் என்ற கருத்தை நிறுவ சமஸ்கிருத மொழியில் உள்வாங்கப்பட்டிருக்கும் திராவிட வானசாஸ்திர, சோதிடக் கலைச்சொற்கள் சான்றாக உள்ளன. பண் டைக்கால சுமேரிய தேசத்தின் வானசாஸ்திர விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒரு மீனவன் காரணகர்த்தாவாக இருந்தான் என சுமேரிய சாசனங் களில் குறிக்கப்பட்டிருக்கும் பரம்பரைக்கதை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கியத்தில் மீனவன் என்பது மன்மதனையும் குறித்தது. மன்மதனின் மனைவி ரத்தியை (ஆதிதிராவிட அர—அத்தி) மீனவர்—த்தி அல்லது மீனத்தி என்ற பெண்தெய்வமாக மீனவர் என்ற இனக்குழு வினரால் கொள்ளப்பட்டது. பெண், தாய், பெண்தெய்வம் என்ற அர்த்தங்களைக் கொடுக்கும் தி, த்தி, அத்தி என்ற ஆதித்திராவிட சொற்கள் பிராகிருத மொழியில் ச்சி—ஆச்சி எனவும், சமஸ்கிருத மொழியில் அக்ஷி—ஆக்ஷி எனவும் உச்சரிக்கப்பட்டதினால் மீனவர்த்தி

மீனுத்தி என்ற பெயர்கள் இன்று மதுரை மீனுச்சி எனவும் மதுரை மீனுட்சி எனவும் வழங்கப்படுகின்றன. அக்காலத்தில் மீனவர்த்தி என்ற பெயரை எழுதுவதற்கு இருமீன்—அத்திமரச் சித்திர எழுத்துப் பாவிக்கப்பட்டிருக்கலாம்.

வேண்டுவதை வேண்டியவாறு நிறைவேற்றும் தமது இஷ்ட பெண் தெய்வத்தை ஆதிதிராவிடர்கள் அர—அத்தி (ரதி) எனவும் அரவர்—த்தி எனவும் பெயரிட்டு அழைத்தனர். இவற்றினைக் குறிக்க முறையே ஒரு பாம்பு—அத்திமர, இருபாம்பு அத்திமர சித்திர எழுத்துக்கள் பாவிக்கப்பட்டன. ஆதிதிராவிடரின் (அரவர் என்ற இனக்குழுவின்) பெண் தெய்வத்தைக் குறிக்கும் அத்தி; அர ; அத்தி அர— அவர் — த்தி என்ற பெயர்கள் பிற்கால சமஸ்கிருத உச்சரிப்பில் ஸக்தி—(சக்தி) ரத்தி; ஸர — ஸவர் — த்தி (சரஸ்வதி) என மாற்றமடைந்தன. மதம், பிரதேசம், இனக்குழுகுறி, இனக்குழுவின் தெய்வம் ஆகியவற்றைக் குறிக்கும் சித்திர எழுத்துக்களைக் கௌரவித்து வணங்கும் பண்பாடு ஆதித்திராவிடர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது.

சந்திர— சூரிய கிரகணத்திற்குக் காரணமாக இருக்கும் இராகுவையும் மீனவர் தமது கடவுளாகக் கொண்டனர். இவர்கள் ராகுவைக் காமக்கடவுள் எனவும் அழைத்தார்கள். விண்ணில் மின்களை விழுங்கும் இராகுவான காமக்கடவுளின் வாகனமாக மண்ணில் உள்ள ஆற்றில் மீன்களை விழுங்கும் முதலை கொள்ளப்பட்டது.

ஆதித் திராவிட வானசாஸ்திரக் கலை

ஆதித்திராவிடரின் வானசாஸ்திர அறிவு மிகவும் தொன்மையானது. மொழியியல், சொல்லாக்கவியல் சான்றுகள் மூலம் சமஸ்கிருத மொழி தோன்றுவதற்கு முன் வானசாஸ்திர அறிவு திராவிட மொழியில் முதன்மை பெற்றிருந்தது. என்பதினை நிறுவலாம். ஆதி திராவிடக் கலைச் சொற்கள் தமிழ் மொழியாலும், சமஸ்கிருத மொழியாலும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. கிரகம், நட்சேத்திரம் என்பன சமஸ்கிருதச் சொற்களாகக் கணிக்கப்பெற்ற பொழுதிலும் உண்மையில் அவை ஆதிதிராவிட சொற்களின் திரிபுகளே.

ஆதித்திராவிடர்கள் விண்ணில் இருவகையான மின்னும் பொருட்களை அவதானித்தார்கள். இவற்றில் நிலைமாருமல் ஒரே இடத்தில் நிலை கொண்ட நட்சேத்திரத்தை மின் எனவும் விண்ணில் வட்டப் பாதையில் நிரந்தரமாக வலம்வரும் கிரகங்களை கோள்—மின் எனவும்

அழைத்தார்கள். கிரகங்களின் இடமாற்றம் மூலம் வருடத்தின் **நாற்காலங்களையும் மழை, காற்று,** வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை நியதிகளையும் நிர்ணயித்து மானிடரின் விதியை ஆளும் கிர கங்களின் பொருத்தமான பெயரே கோள் ஆகும். கோண்—மின் கோன்—மின் (ஆட்சி செய்யும்மின்) கோள்—மின் எனவாயிற்று. கோன் என்பது அரசன், ஆண்டவன் ஆகியோரைக் குறிக்கும். சொல உச்சரிப்பில் ண ன, ள ண, ல ன என்பவற்றின் ஒலிமாற்றங்கள் மொழியியல் ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதியாகும். மனிதர்க ளின் தலைவிதியை எவ்வாறு கோள்கள் ஆட்சி செய்கின்றதோ அதே போல மனிதர்களின் நடத்தையை ஆட்சி செய்வது அரசனின் செங் கோல் ஆகும். திராவிட மொழியியல் ரீதியில் செங்கோலைக் குறிக்கும் சொல்லும் மேற்படி விதியின் அடியாகப் பிறந்ததாகும்.

(கோல் > கோன் ; ல் / ன மாற்றம் ; கோன் — மின் > கோண் — மின் > கோள்—மின் ; ண/ள மாற்றம்)

கோள்களின் இடமாற்ற பிரதிபலிப்புக்களைப் பற்றிய அவதானிப் புகள் ஆதித்திராவிடர்களின் நவக்கிரக வழிபாட்டிற்கும், சோதிட நம்பிக்கைக்கும் காரணமாயிற்று. இவ்வாறு வழிபாட்டிற்கு உரிய அந் தஸ்தைப் பெற்ற கோள்களின் பெயர்கள் அவதானிக்கப்பட்ட நிறங் களுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு அழைக்கப்பட்டன.

கோள்கள்	**ஆதித் திராவிடப் பெயர்**	**குறிக்கும் நிறம்**
செவ்வாய்	செவ்வாய்	சிவப்பு
புதன்	பச்சை	பச்சை
வியாழன்	பொன்	பொன்
வெள்ளி	வெள்ளி	வெள்ளை
ராகு	இரா—ஆக்கு	கறுப்பு
சேது (கேது)	சேது கேது	சிவப்பு

சந்திரனின் முகத்தைக் கறுக்கச் செய்யும் கோள் இரா—ஆக்கு (இராகு) எனவும் செம் நிறம் ஆக்கும் கோள் சேது அல்லது கேது எனவும் ஆதிதிராவிடர்களால் பெயரிடப்பட்டன.

நட்சேத்திர சக்கரம்

நிலைமாறாத பெயரிடப்பட்ட இருபத்தேழு மின்கூட்டங்களின் சித்திரங்களை உள்ளடக்கிய வட்ட வடிவமான வானமண்டல வரை படமே நட்சேத்திர சக்கரமாகும். இப்படம் பூமியை மையமாகக் கொண்டு இருபத்தேழு நட்சேத்திரக் கூட்டங்களை உள்ளடக்கி இரு

பத்தெட்டு சமபகுதிகளாகப் பிரித்துக் கீறப்பட்டதாகும். இவ்வாறு நேர்கோடுகளால் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் கீறு—அகம் (கீறப் பட்ட வீடு) எனப்பட்டது. கீறு அகத்தின் சமஸ்கிருதத் திரிபே கிரகம் (கோள்) கிருகா (வீடு) என்பனவாகும்.

கீறு அகத்தில் அடங்கியிருக்கும் மின்கூட்டத்தின் சித்திரம் நாள் மின்—சித்திரம் எனவும் நாள் சித்திரம் எனவும் அழைக்கப்பட்டன. நாள்—சித்திரம் என்பது திரிபடைந்து சமஸ்கிருத மொழியில் நட்சேத் திரம் எனவாயிற்று. கிழமையின் ஏழுநாட்கள் கோள்களின் பெயரைப் பெற்றமைபோல மாதத்தின் நாட்கள் கீறு அகத்தில் அடங்கியிருக்கும் நட்சேத்திரங்களின் பெயரைப் பெற்றன. தற்கால ஆண்டு அட்டவணை (Calendar) வழக்கிற்கு வருமுன்னர் திராவிட நாள் சித்திர சக்கரமே பாவனையில் இருந்தது.

பூமியை மையமாகக் கொண்ட இச்சக்கரத்தில் சந்திரன் பூமி யைச் சுற்றி வருகின்றது. இந்நிகழ்ச்சி மூலம் சந்திரன் சம்பந்தப்படும் மின்கூட்டங்கள் நாள்தோறும் வேறுபடுவது அவதானிக்கப்பட்டது டன் குறித்த மின்கூட்டத்துடன் மீண்டும் சம்பந்தப்பட 28 நாட்கள் செல்கின்றன என்பதும் கணிக்கப்பட்டன.

சந்திரன் குறித்த நாளில் எந்த நட்சேத்திரத்துடன் சம்பந்தப் படுகின்றது என்பதினை அவதானித்து திகதியை (நட்சேத்திரம்) நிர் ணயித்தார்கள். எடுத்துக்காட்டாக மாதத்தின் மூன்றும்நாள் சந்தி ரன் கார்த்திகை நட்சேத்திரம் எனப் பெயரிடப்பட்ட மின்கூட்டங்க ளுடனும், பதினுன்காம் நாள் சித்திரை நட்சத்திரம் எனப் பெயரிட ப்பட்ட மின்கூட்டங்களுடனும் இருபத்தைந்தாம் நாள் புரட்டாதி நட்சேத்திரம் எனப் பெயரிடப்பட்ட மின்கூட்டங்களுடனும் சம்பந் தப்படுவதைக் கொள்ளலாம். மேற்கூறிய மின்கூட்டங்கள் முறையே மூன்றும், பதினுன்காம், இருபத்தைந்தாம் கீறுஅகங்களில் (Lunar Mansions) அடங்கியுள்ளன.

இருபத்தெட்டு நாட்கள் கழிந்த பின்னர் சந்திரன் மீண்டும் குறித்த நட்சேத்திரத்துடன் சம்பந்தப்படுகின்றது. சந்திரன் பூமியைச் சுற்றிவர இருபத்தெட்டு நாட்கள் எடுப்பதே இதன் அடிப்படை விஞ்ஞானக் காரணமாகும். இவ்வாறு ஒருமாத காலப் பிரயாணத்தை சந்திரன் வானமண்டல வரைபட கீறு அகங்களுடே பிரயாணம் செய்து முடித்த பின்னர் அடுத்தமாதப் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றது.

வான மண்டல வரைபடங்கள் கோள்களின் வட்டப்பாதையைக் குறிக்கவும், பிரயாண நேரத்தைக் கணிக்கவும் உபயோகிக்கப்பட்டன.

கோள்	மையம்	வட்ட பிரயான காலம்
சந்திரன்	பூமி	28 நாட்கள்
பொன் (வியாழன்)	சூரியன்	12 ஆண்டுகள்
சனி	சூரியன்	30 ஆண்டுகள்

கோள்களின் விண்மண்டலப் பிரயாணங்களை அவதானித்து காலத்தைக் கணிக்கும் முறையை தமிழர்களின் மூதாதையர்களான ஆதித்திராவிடர்கள் கண்டுபிடித்து வழங்கினர்கள் என்பதற்கு தமிழ் சமஸ்கிருத மொழியில் உள்வாங்கப்பட்டிருக்கும் ஆதித் திராவிடச் சொற்கள் நிலையான சான்றுகளைத் தருகின்றன.

திராவிடரின் ஞானக்கடவுள் கணபதி

இந்து சமய தத்துவங்களை விளக்குகின்ற பல்வேறு இந்தியமொழிகளில் தமிழில்தான் இந்து தெய்வப் பெயர்களின் உட்கருத்தைச் சிறப்பாக விளக்கமுடியும். தமிழ் மொழிமூலம் தெளிவாகும் விளக்கங்கள் இந்துசமயத்தின் மூலமொழி ஆதிதிராவிடம் என்பதை எடுத்துக் காட்ட ஆதாரமாக அமைகின்றன. உதாரணமாக பிரமன், சிவபெருமான் என்ற ஆண்தெய்வத்தின் பெயர்களை ''படைக்கும் ஆண்'' அல்லது ''பெறும் ஆண்'' (பிரமன்) உயிர்(சிவ்) பெறும் ஆண்'' என்று தமிழில் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். ஆதித்திராவிட மொழியில் ஒரு தெய்வத்தை பல பெயர் கொண்டு அழைத்தார்கள். ஆதித்திராவிட சமய நூல்கள் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டபொழுது பல மாற்றங்கள் அடைந்தன. ஒரு தெய்வத்தைக் குறித்த பலபெயர்கள் அல்லது பட்டங்கள் பல தெய்வங்களைப் படைத்தன. அழகிற்கும் தமிழ் அறிவிற்கும் தந்தை என முருகக் கடவுள் கருதப்பட்டார். முற்காலத்தில் திராவிடர் இவரை இலக்கிய கணித விஞ்ஞான கடவுள் எனக் கொண்டார்கள். ஆதித் திராவிட மொழியில் ''எழுத்து'' என்ற கருத்தைத் தரும் பல சொற்கள் இருந்தன. உச்சரிப்பு வேற்றுமையால் உண்டாகிய எழுத்து என்ற கருத்தைத் தரும் சொற்கள் வருமாறு :— எழு, இழ (இல), இழி (இலி) இல், எழி (எலி) இழே (இலே). இச்சொற்கள் தமிழ் இலக்கண அமைப்பில் வேர்ச் சொற்களாகப் பிற்காலத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. எழுத்து, இலக்கியம், இலிபி, நெடில், குறில், இலேகனம், இலக்கணம் ஆகிய சொற்கள் மேற்கூறிய வேர்ச் சொற்களுக்கு எடுத்துக் காட்டாக அமையும்.

அறிவின் கடவுளாகக் கொள்ளப்பட்ட முருகனின் மிகப்பழமையான பட்டங்கள் இழ-வன், கணிதன் என்பனவாகும். இழவன் கணிதன் என்பன முறையே எழுத்துக்கடவுள், கணிதக்கடவுள்எனப் பொருள்படும்.

பிற்காலத்தில் கணிதன் கணித-சாமிஎன்ற பட்டங்கள் கந்தன், கந்தசாமி எனத் திரிபடைந்தன. இழவன் என்பதனை இளம் கடவுள் என்னும் பொருள் கொடுக்கும் குமரன் என சமஸ்கிருத மொழி பெயர்ப்பில் குறிப்பிட்டார்கள். குமரன் பிற்காலத் தமிழ்மொழிபெயர்ப்பில் முருகன் ஆனுன். கணிதக் கடவுளான முருகனின் கணி-ஈசா ஆகிய பட்டம் காலப்போக்கில் கணேசா, கானத்தின் தலைவனுன கணபதியாக மாறி கானத்தின் தலைவனுன யானை முகத்தானை — கான-ஈசனை (கணேசனை) உருவாக்கி விட்டது. ஆதித்திராவிடத்தில் எழுத்துக்கடவுள் என்ற கருத்தைத் தரும் பட்டங்கள் ஆகிய எலி-ஈசா எல், எலி அலி-ஈசா, அலி என்பனவற்றை செமித்திய இனத்தவர்கள் தமது மொழியில் உள்வாங்கி தமது தெய்வங்களை எல், எலி, அலி போன்ற பெயர்களைக் கொண்டு அழைத்தார்கள். விவிலிய தீர்க்கதரிசிகளின் பெயர்களான எலிஏசா-எலிஜா எலிசபெத் (எலி-ஈசா-பதி) என்பன திராவிட எழுத்துக்கடவுளின் பட்டங்களின் திரிபுகளாகக் காணப்படுகின்றன.

முருகனை மனித உருவில் ஒரு இளம் போர்வீரனுக பிற்கால ஆரியர் கொண்டார்கள். முருகனின் எலிஈசா, கணிஈசா ஆகிய பண்டைக்கால பட்டங்களை சேர்த்து திராவிட சித்திர எழுத்து முறையில் எழுதும்பொழுது எலியின் படமும், யானையின் படமும் பாவிக்கப்பட்டன. யானைமுகக்கடவுளான கணபதிக்கு எலிவாகனம் இம்முறையில்தான் உருவாகிற்று. இத்தகைய விளக்கத்தைத் தமிழ் மொழியிலன்றி இந்து சமயத்தை விளக்குகின்ற சமஸ்கிருதம் போன்ற வேறு மொழிகளில் பெற முடியாது. ஆதித்திராவிட சித்திர எழுத்து அடிப்படையில் பெறக்கூடிய இவ்விளக்கம் இந்துசமயத்தின் மூலமொழி ஆதித்திராவிடம் என்பதை எண்பிக்கின்றது.

தமிழ்த் தெய்வம் — முருகன்

வடமேற்கிந்தியா (மஹா-ஈழ-ஸ்தா, மா-எழு-அஹ) குஜராத் (ஈழத்-ஆல, லொதால்) மத்திய இந்தியா (இழா-இடம், லாடம் லாட் தேசம்) தென் இந்தியா (தென்-ஈழ-அஹம், தமிழ்-அகம்), இலங்கை (ஈழ-அகம்) ஆகிய நாடுகளில் வாழ்ந்த ஆதித்திராவிடர் ஈழவர் என அக்காலத்தில் அழைக்கப்பட்டார்கள். இவர்களின் குலக் கடவுளாக இழவன் (முருகன்) கொள்ளப்பட்டார். மகா பாரதப் போரில் ஈடுபட்ட குருபாண்டவரின் மூதாதையர் ஐலவர் (ஈழவர்) என சமஸ்கிருத இதிகாச கதை ஒன்றில் கூறப்பட்டிருக்கின்றது. இலங்கையின் மிகப் பழமையான பெயர் ஈழமாகும். இங்குவாழ்ந்த

ஆதிதிராவிட இந்துசமயத்தினர் தம்மை இழவர் எனவும் ஈழவர் எனவும் மொழி, இன, இருப்பிட அடிப்படையில் அழைக்கப்பட்டார்கள். ஆதிதிராவிடரின் மொழிப் பெயர் ஈழமொழி அல்லது எழுமொழி யாக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

நவீன சிங்கள மொழியின் மூலமொழி ஈழ அல்லது எழு மொழி என்பதை ஈழத்தின் பௌத்த மதத்தினர் ஏற்றுக்கொண்டிருக்கின்ற னர். முருகனின் ஈழநாட்டுத் தொடர்பை வள்ளியின் கதை கூறுகின் றது. ''கதரகம தெவியோ'' என்ற பெயரில் தங்கள் குலத்தெய்வ மாகிய முருகனை ஈழத்துப் பௌத்ததிராவிடர் ஆகிய சிங்களவர்கள் மிகப் பக்தியுடனும், நம்பிக்கையுடனும் வணங்குகின்றார்கள். இலங் கைத் தமிழர் என்ற இந்துமத ஈழவரும் பிற்காலத்தில்சிங்களவர் எனப் பெயர் பெற்ற பௌத்த ஈழவரும் முருகனை ஈழநாட்டின் பொதுத்தெய்வமாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். பௌத்த பெருமானின் பிறப்பிற்கு முன் ஈழத்தில் இந்து சமயமே நிலவிய தென்பதும் இங்கு வாழ்ந்தவர்கள் ஆதித்திராவிடர் என்பதும் அவர் கள் ஈழமொழியைப் பேசினார்கள் என்பதும் தெளிவு.

ஏகாட்சரம் — ஓஉம்

இந்துசமய தத்துவங்கள் பற்றிய உண்மைகளைப் போதிக்க ஆதித் திராவிடர் பல உபகரண வழிமுறைகளைக் கையாண்டார்கள். சித்திர எழுத்துக்கள் பாவனைக்கு வருமுன் கழிமண்ணால் செய்யப்பட்ட தாய்த் தெய்வ, ஆண்தெய்வ உருவங்களும் லிங்க, யோனி உருவக்கற்களும் தெய்வ அறிவை மக்கள் மனதில் பதியச் செய்யும் தெய்வ சின்னமாக உபயோகிக்கப்பட்டன. கி.மு. 3000 ஆண்டளவில் திராவிட சித்திர எழுத்துக்கள் தெய்வங்களின் பெயரைக் குறிக்கப் பாவிக்கப்பட்டன. இவை மர, அரவ, மிருக வழிபாடுகள் தோன்றக் காரணமாயின. பிரதம—குரு, மாபெரும் எழுத்துக்கடவுள் என்ற கருத்தைத் தரும். மா—இழ, மா-வெழா என்ற முருகனின் பட்டங்களைச் சித்திரஎழுத்து முறையில் எழுத மயிலும் (மா-இழா) பெரும் வேலும் (மா-வெழா) மா இலையும் (மா-இலா) பிரயோகிக்கப்பட்டன. மயில் முருகனின் வாகனமானதன் காரணம் இதுவே.

கி.மு. 2000 ஆண்டளவில் தெய்வ ஞானத்தை மிகச் சுருக்க மாக விளக்கும் ஒரு புது வாகனம் (அம்சம்) ஆதித்திராவிடர் கண்டு பிடித்தார்கள். அதுவே ஆதித்திராவிட நெடுங்கணக்கு ஆகும். அக் கால நெடுங்கணக்கில் முதல் மூன்று ஒலிகளை முறையே குறிக்கும் ஓ-உ-மு ஆகிய எழுத்துக்களை இணைத்து ஓஉம் என்னும் ஏகாட்சரத்தை

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளியில் கண்டெடுக்கப்பட்ட பண்டைய சுட்டகளிமண் தாய்த் தெய்வ சிலையும் செங்கல்லும்.

பின்னணியில் அதனை ஒத்த பண்டைய தாய்த் தெய்வ, ஆண் தெய்வ இந்து நதி பள்ளத்தாக்குச் சிலைகள்

THE MOTHER GODDESS OF NILAAVELI

(Reprint of Plate 10. The Land of Letters, Dr. J. T. Xavier, 1977)

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

படைத்தார்கள். ஏகாட்சரத்தின் மூன்றெழுத்துக்களும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்யும் தனிக்கடவுள் மும்மூர்த்திகளை (மும்-மகத்-தி - மூன்று முகக் கடவுள்) குறித்தனர்.

மக்களால் பல பெயர்கள் உருவங்கள் கொண்டு வழிபட்ட பொழுதிலும் கடவுள் ஒன்றே என்ற கற்பனையை நிலைநாட்ட ஏகாட்சரமும், மும்மூர்த்தி சிலையும் மக்கள் முன் வைக்கப்பட்டன. பிரணவ மந்திரம், அத்தி அக்ஷரம் என்ற பெயர்கள் கொண்டு ஏகாட்சரம் விளக்கப்பட்டது. பிரணவன் என்பது கடவுள் என்பதையும் மந்திரம் என்பது மனதில் பதிந்த படம் (mental picture) என்ற கருத்தையும் கொடுக்கின்றன. மந்திரம் என்பது மனது, இரம் என்னும் இரு வேர்ச் சொற்களை அடக்கிய பதமாகும். மந்திரம் = மனது இரம் = படம்) அத்தியக்ஷரம் தெய்வ-அகஷரம்என்று நேர்க்கருத்தைக் கொடுக்கிறது. அத்திஅக்ஷரத்தால் விளக்கப்படும் மும்-முக-தி தனி முழுமுதற் கடவுள் ஆகும். ஆதித்திராவிடர் எழுத்துக்களை இலக்கங்களாக பாவித்தார்கள். இவ்வெழுத்துக்களின் ஒலியுடன் எண், த்து, எழு, ட்டு போன்ற விகுதிகளை இணைப்பதன் மூலம் இலக்கத்தின் பெயரைப் பெற்றார்கள்.

ஒ-எண் — 1 (ஒன்)
உ-த்து — 2 (உத்து)
மு-எண் — 3 (மூன்)
எ-எழு — 7 (ஏழு)
அ-ட்டு — 8 (அட்டு, எட்டு)
ப-த்து — 10(பத்து)

ஓ,உ,மு என்ற ஏகாட்சரத்தின் முதல் மூன்றெழுத்துக்களும் ஆதி திராவிட முதல் மூன்று இலக்கங்களைக் குறிக்கும். மூன்று இலக்கங்களும் முத்தொழிலைச் செய்யும் ஓம் என்னும் ஏகாட்சரத்தில் அடங்கும் முழுமுதற் தனிக்கடவுளைக் குறிக்க ஏகாட்சர மந்திரம் உருவாக்கப்பட்டது.

ஏகாட்சர மந்திரத்தை விளக்கக்கூடிய ஞானக்கடவுள் முருகன் என்று புராணங்கள் கூறும். இ. மகாதேவன் என்பவர் முருகனைப் பற்றி பின்வரும் கருத்தை எம்முன் வைத்துள்ளார் ''மரணத்தின் பின் கடவுளாக வணங்கப்பட்ட பண்டைக்கால ஈழவரின் பிரதம குருவாகிய மா-ஈழவன் பிற்காலத்தில் குமரன் எனவும் முருகன் எனவும் வணங்கப்பட்டார்''

இக்கொள்கை உண்மையானல் எழுத்துக்கடவுள் இழவன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்த முருகன் ஆதிதிராவிட நெடுங்கணக்கை கண்டுபிடித்தவர் என்றும், ஏகாட்சர மந்திரத்தை இயற்றியவர் என்

றும் ஊகிக்கலாம். கந்த புராணத்தில் ஏகாட்சரத்தின் அர்த்தத்தை சிவனுக்கே போதித்து சிவகுரு எனும் பட்டத்தை முருகன் பெற்ருன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கி.மு. 1500-ம் ஆண்டளவில் வடமேற்கிந்தியாவில் உருவாகிய சமஸ்கிருதத்தின் ஆதிக்க படர்ச்சி ஆதிதிராவிடத்தின் தனித்தன்மை யைக் குறைத்ததுடன் இந்து சமயத்தினதும் இந்து சமுதாயத்தின தும் கற்ருேர் மொழி என்ற அந்தஸ்தையும் பெற்றது.

இந்து தெய்வஞான கற்பனை

காலப் பிரிவினை	ஒளிப்புல தொடர்பு முறை	ஒவிப்புல தொடர்பு முறை
1	**சிலைகள் சின்னங்கள்** தாய் தெய்வச் சிலை லிங்கம்-யோனி ஆண் தெய்வச் சிலை	ஆதித்-திராவிடம்
2	**சித்திர எழுத்துக்கள்** மர, அரவ, மிருக வழிபாடு தெய்வ வாகன தோற்றுவாய்	ஆதித்-திராவிடம் (கி.மு. 3000)
3	**ஆதித் திராவிட நெடுங் கணக்கு** பிரணவ மந்திரம்-ஓஉம்(அழிந்துபோன) திராவிட சமயநூல்கள்	ஆதித் திராவிடம் (கி.மு. 2000)
4	**சமஸ்கிருத நெடுங் கணக்கு** வேத நூல்கள்	சமஸ்கிருதம் (கி.மு. 1500)

மேற்கூறிய ஆதாரங்களின் வெளிப்பாடுகள் இந்து சமயத்தின் மூலமொழி சமஸ்கிருதம் அல்ல, தமிழ் மொழியின் பண்டைய வடிவ மான ஆதித்திராவிடமே என்பதை எண்பிக்கின்றன.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

த
ன்
ய
ள
ன,
படிவ

DR. J. T. XAVIER

இந்நூல் ஆசிரியரின்

THE LAND OF LETTERS

என்னும் ஆங்கில நூலுக்கு

அருட்திரு. தனிநாயகம் அடிகளார்

வழங்கிய

முன்னுரை

FOREWORD

It is seldom that medical men engaged in practice, have research publications to their credit in fields like epigraphy, etymology and anthropology. Dr. J. T. Xavier is an admirable exception. He is a Consultant Surgeon at the Base Hospital, Trincomalee. This book of his is of interest to students of history, archaeology, comparative religion, comparative linguistics and comparative civilizations, particularly Hindu—Buddhist civilization.

He propounds new theories concerning the origin of the Sinhala race and the Tamil race and their migrations to Lanka about the year 1800 B. C. He traces also their writing to the Indus Valley He makes a new application of etymological analysis in reconstructing ancient themes such as the invention of the first phonetic alphabet. He makes also several unorthodox suggestions which may lead to further research Such is the theory of the Indian origin of the story of Adam and Eve and the pre-Aryan names of the Mother Goddess.

The book is full of new theories and suggestions and etymological explanations which must produce better understanding between the various linguistic groups of India and Sri Lanka

I wish the book all success It is so interesting and informative.

Bishop's House,
Valalai,
Atchuvely,
Sri Lanka (Ceylon)
28 December 1976.

X. S. Thani Navagam,
M. A., M Litt. (Annamalai)
Ph. D. (Lond.) D. D. (Rome)

வெளியீடு :

சன்மார்க்க ஐக்கிய வாலிப சங்க சனசமூக நிலையம்,
பலாலி-பருத்தித்துறை விதி சந்தி,
யாழ்ப்பாணம்.